47 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 18-5-33

பங்கமுற்றே பேயும் ஓட—



எங்கள் வேள்வி
கூட மீதில்
ஏறுதே தீ! தீ! தீ!
இந்நேரம்
பங்க முற்றே
பேய்களோட
பாயுதே தீ! தீ! தீ!
அம்மாவோ!
வானை நோக்கி
கைகள் தூக்கி
வளருதே தீ! தீ! தீ!
இந்நேரம்
ஞானமேனி
உதய கன்னி
நண்ணி விட்டாளே
இந்நேரம்!,

—பாரதியார்.

—*Courtesy National Call.*

சிம்லாவுக்கு ஆதரவா?

நாட்டில் சமாதானத்தை மீண்டும் நிறுவுவதற்காக சாந்த அவதாரமான காந்தி யடிகள் சிறையினின்று வெளி வந்ததும் முதன் முயற்சி செய்தார். சிம்லாவிலுள்ள அதிகார வர்க்கம் முட்டுக் கட்டை போட்டுவிட்டது. இவ்வாறு 'சிம்லா' செய்தது தப்பிதமென்று இந்தியாவிலுள்ள பல பத்திரிகைகளும் பல தலைவர்களும் பல சங்கங்களும் ஒரே முகமாய்க் கூறி வருகின்றதைக் காண்கின்றோம்.

தவறிழைத்து விட்ட சிம்லா அதிகாரிகளை அவ்வப்போது திருத்துவதற்காகவே சீமையில் 'வெள்ளை மாளிகை' என்று ஓர் காரியாலயமும், 'இந்தியா மந்திரி' என்று ஓர் உத்தியோகஸ்தரும் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இப்போதோ அந்த உத்தியோகத்தை வகிக்கும் ஹோர் துரை, சிம்லா தேவதைகளுக்கு பிடில் வாசிக்கத் தொடங்கி யிருப்பதைக் கண்டு வியப்படைய வேண்டி யிருக்கிறது.

பார்லிமெண்டில் தாமஸ் வில்லியம்ஸ் என்ற அங்கத்தினர் "சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டிருப்பதால் இந்திய ராஜீயக் கைதிகளை விடுவிப்பதுதான் சமாதானத்தை நிலை நாட்டும் வழி" என்று ஆலோசனை கூறினர். உடனே சாமுயேல் ஹோர் எழுந்து, "ஸிம்லா அதிகாரிகள் செய்ததே சரி" என்று 'ததிங்கணதோம்' போட்டு விட்டார்.

16 மாதங்களுக்கு முன்னே காந்தியடிகளுக்கு பேட்டி தருவதற்கு வில்லிங்டன் மறுத்த காரணத்தினல்தான் சட்ட மறுப்பு இயக்கமே தோன்றிற்று. அப்போது வில்லிங்டனுக்கு அறிவுறுத்த வெள்ளை மாளிகை அதிகாரிகள் தவறி விட்டனர். அத்தகைய தவறை மீண்டும் செய்ய வேண்டாமென ஸாமுயேல் ஹோருக்கு எச்சரிக்கை செய்வாரில்லை போலும்!

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் நட்புரிமை ஏற்பட வேண்டுமென்பது அன்புருவான காந்தியடிகளின் கோரிக்கையாகும். 16 மாதங்கட்கு முன்னே எந்த இடத்தில் ராஜீய நிலைமை யிருந்ததோ அந்த இடத்தினின்று தொடர்ந்து நடத்துவதாக காந்தியடிகள் வாக்களித்திருக்கிறார். அவருடைய வாக்குக்கு இந்திய அரசாங்கம் இணங்காவிடில் என்ன ஆகும்? பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள பிளவு இன்னமும் அதிகரிக்கு மென்பதை ஸிம்லா அதிகாரிகளும் சீமை அதிகாரிகளும் அறியார்களோ?

நவீன ஆலயம்

(மகாத்மா காந்தி)

உத்தமமான ஆலயம் எப்படி யிருக்க வேண்டும்? இதைப் பற்றி எனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். எவ்வளவு இயலுமோ அவ்வளவு விஸ்தாரமான இடத்தை உங்களுடைய புதிய ஆலயத்துக்கு நீங்கள் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். அது ஒரு கிராமத்தின் அல்லது நகரத்தின் நடுமத்தியில் இருக்கவேண்டு மென்பதில்லை. ஹரிஜனங்களும் ஏனைய ஏழைகளும் வரக்கூடிய இடமாக இருக்க வேண்டும். சாத்தியமானல், சுற்றிலும் உள்ள இடங்களை விட அது சற்று உயரமாக விருத்தல் நல்லது. எவ்வாறாயினும் சரி; கோயிலின் அடிமட்டம் எவ்வளவு அதிகமாக இயலுமோ அவ்வளவு உயரமாக இருக்க வேண்டும். இதில் தான் தினந்தோறும் ஈசுவரத் தியானம் செய்ய ஒரு பகுதியைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

இதைச் சுற்றிலும் ஒரு பள்ளிக்கூடம், ஒரு வைத்தியசாலை, இலௌகிகம் பாரமார்த்திகம் ஆகிய இருவகை நூல்களும் அடங்கிய ஒரு வாசகசாலை, ஆகியவற்றை ஸ்தாபிக்க வேண்டும்: கோயிலுக்கருகே, அதிதிகளுக்கு அன்னமிடும் தர்ம சாலை ஒன்றும் அமைக்க வேண்டும். இவை ஒவ்வொன்றும் தனித்தனி ஸ்தாபனங்களாகவே யிருக்கவேண்டும். எனினும் எல்லாம் கோயிலின் ஆதிக்கத்துக்கு உட்பட்டே யிருக்க வேண்டும். கோயிலைக் கட்டும் போதே இவற்றையும் ஒரே காலத்தில் கட்டலாம். அல்லது சௌகர்யப் பட்டபோது ஒவ்வொன்ருகவும் கட்டலாம்.

"எங்கே ஜனங்கள் கூடி, ஈசுவரனது திருநாமத்தை ஹிருதய பூர்வமாக உச்சரிக்கின்றார்களோ, அங்கே பகவான் பிரசன்னமாகின்றான்; அதுவே அவன் ஆலயம்" என்று பகவத்கீதை கூறுகின்றது. ஆகவே ஆலயத்தை ஆரம்பிப்பது வெகு சுலபமென்று ஏற்படவில்லையா?

கட்டிடம் கட்டி, கடவுளை ஸ்தாபித்து, கும்பாபிஷேகம் செய்வது குருக்களின் வேலை. அவர் அகப்பட்டதும் தம் காரியங்களை அவர் செய்வார். ஆனல், முதல் பிரார்த்தனை நடந்த பொழுதிருந்தே, கோயில் தோன்றி விடுகின்றது. அந்தப் பிரார்த்தனையானது உண்மையான ஸ்திரீ புருஷர்களால் செய்யப்படுமானல், அக்கோயில் தொடர்ந்து அபிவிருத்தி யடைதல் நிச்சயமாகும்.

—"ஹரிஜனம்"

"வந்திடுங்க திருநாளைக்கு"

"மச்சான் மச்சான் வந்திடுங்க திருநாளைக்கி" என்று கூப்பிட்டான் ஒருவன். "கெண்டை போட்ட வேட்டி யில்லை வரமாட்டேன் திருநாளைக்கு" என்று சொன்னானும் மற்றவன். ஆனால் திருநாள் நெருங்க நெருங்க கெண்டை போட்ட வேட்டியைப் பற்றி மறந்துவிட்டு விருந்தாளியாகப் புறப்பட்டு விட்டானும்.

"இந்தியர்களுக்கு கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியில் ஆங்கிலேயருக்கு சமமான அந்தஸ்து கிடைக்கா விட்டால் சீமைக்கு வரப் போவதில்லை" என ஸர் தேஜ்பகதூர் ஸாப்ரூ முறுக்கிக் கொண்டிருந்தார். "மச்சான் மச்சான் வந்திடுங்க திருநாளைக்கு" என்று சீமையினின்று அழைப்புக் கடிதம் வந்ததும் தமது பழைய அபிப்பிராயத்தைச் சாக்கடையில் போட்டு விட்டு ஸாப்ரூ புறப்பட்டு விட்டார். இப்போது கூட்டுக் கமிட்டியில் இந்திய மகான்களின் அந்தஸ்து என்ன தெரியுமா?

1. டெலிகேட் என்று பெயர் உண்டு.

2. கமிட்டியில் வோட் செய்யும் அதிகாரமில்லை.

3. பத்திரிகை நிருபர்களுக்கு முன் வாக் சாதுர்யம் காட்டலாம் என்ற ஆசையிலும் மண் விழுந்து விட்டது. ஏனெனில் கமிட்டிக் கூட்டம் 'பர்தா'வில் இரகஸ்யமாக நடக்கும்.

4. எவ்வெப்பொழுது 'கோஷா' மகா நாட்டில் பேசலாமென அழைக்கப் படுகின்றார்களோ அவ்வப்பொழுது தான் இந்திய அங்கத்தினர்கள் நுழையலாம். மற்ற வேலைகளில் தனிக் கட்டிடத்தில் இருந்துகொண்டிருக்க வேண்டும்.

5. என்னென்ன விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டு மென்பதை பிரிட்டிஷார் முன்னடியே நிச்சயித்து அட்டவணை அச்சடித்துத் தருவார்கள். அவ்விஷயங்களைத் தான் பேச வேண்டும்.

இப்படியாக, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக கூட்டுக் கமிட்டியில் ஸாப்ரூ கூட்டத்தின் நிலை, பூஜ்யத்தை நோக்கி ஓடிவிட்டது. நிற்க,

"காங்கிரஸோடு சர்க்கார் சமாதானம் செய்து கொள்ளா விட்டால் ஒன்றும் பலிக்காது" என்று ஐயக்கர் இந்தியாவில் கூறிக் கொண்டிருந்தார். இப்போது இந்தியாவில் என்ன நிலைமை தெரியுமா? காந்தியடிகள் எரவாடாவினின்று வெளி வந்ததும் சமாதானத்திற்காக ஓர் சமிக்ஞை செய்தார். அறிக்கையொன்றை வெளியிட்டு சட்ட மறுப்பையும் நிறுத்தி வைத்திருக்கிறார். ஆனால் வில்லிங்டன் அரசு அதை லக்ஷியம் செய்யவில்லை. கவுரவமான சமாதானத்திற்கு சர்க்கார் தயாரா யில்லாதது பற்றி சீனிவாச சாஸ்திரி உள்பட அனைவரும் கண்டித்திருக்கின்றனர். இந்தச் செய்தியை யெல்லாம் சீமையிலுள்ள ஐயக்கர் கேள்விப்பட்டிருக்க வேண்டும். ஐயக்கர் முன்னே விரும்பியதற்கு மாறாக இந்திய துரைத்தனம் நடந்து கொள்வதைக் கண்டு அவருக்கு துளியாவது ரோஷம் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும். அல்லது "வெட்கம் வாழைக்காய்க் கறியாகுமா?" என்று நினைத்துத் தமது பழைய வார்த்தைகளை விழுங்கி விடப் போகிறாரா என்பதையாவது அறிய வேண்டும்.

சீமைக்குப் போயுள்ள சீமான்களுக்கு தேசபக்தி மட்டும் இல்லை யென்று நினைத்துக்கொண்டிருந்தோம். இப்போது சுய மரியாதையும் இல்லாதவர்க ளென்றும் சொன்ன சொல்லைக் கபளீகரம் செய்வதில் கெட்டிக்காரர்க ளென்றும் தெரிகிறது. .

காங்கிரஸோடு சர்க்கார் சமாதானத்துக்கு வரவேண்டு மென்பதை ஐயக்கர்-ஸப்ரூ கூட்டம் வற்புறுத்திப் பேசி ஒன்றும் முடியா விட்டால் கமிட்டியில் குந்தாமல் கவுரவமாகத் திரும்பி விடுவது தான் சரியான வழி. மானங் கெட்டாலும் பரவாயில்லை யென்று குந்திக் கிடந்தார்களானால் இவர்களைப் பார்த்து இந்தியா மட்டுமல்ல, உலகம் முற்றிலும் சிரிக்கு மென்பது திண்ணம். போன மச்சான்கள் என்ன செய்யப் போகின்றனரோ பார்ப்போம்.

தங்கம்

மே மாதம் 13ம் உயோடு முடிவான வாரத்தில் மட்டும் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியான தங்கம் ரூ.118,14,466. அன்று மட்டும் ஏற்றுமதியானது 112,70,281 ரூபாய் தங்கக் கட்டியும், 5,44185 ரூ. சவரனும் ஏற்றுமதியாயின. இது வரையில் மொத்தம் ஏற்றுமதியா யிருப்பது 126 கோடியே 36 லட்சத்து 71 ஆயிரத்து 588 ரூபாய் பொறுமான தங்கம்.

உள்ளதைச் சொன்னால்—

ஒரு நொண்டி தெரு வழியே போனான். "ஏ நொண்டி" என்று இன்னொருவன் கூப்பிட்டான். நொண்டிக்கு வெகு கோபம் வந்து விட்டது. "இதோ பார், உன்னை என்ன பாடு படுத்துகிறேன்" என்று கொக்கரித்து நொண்டி, ஓடி வர முயன்றான். குப்புற அடித்து விழுந்ததுதான் அவன் கை மேல் கண்ட பலன். இந்தியாவிலிருந்து கூட்டுக் கமிட்டிக்குப் போன பிரகிருதிகளின் கதியும் இதே மாதிரி யிருக்கிறது.

"கூட்டுக் கமிட்டியின் செவ்வாய்க்கிழமைக் கூட்டத்தில் பல இந்தியர்கள் சாட்சியம் கொடுப்பார்கள்" என்று லண்டன் பத்திரிகை யொன்று எழுதிற்றும். "சாட்சியம் கொடுப்பவர் என்று எங்களை எப்படிச் சொல்லலாம்? எங்களைப் பிரதிநிதிகள் என்றல்லவா சொல்லி யிருக்கிறார்கள்!" என்று ஐயாப்ரூ கோஷ்டியார் ஆர்ப்பரித்தார்களாம். சாட்சியாவது, பிரதிநிதியாவது! எல்லாம் ஜான்புல்லுக்கு ஒரே ரகம்தான். உள்ளதைச் சொன்னால், இவர்கள் கோபித்துப் பயனென்ன?

இந்தியர் அங்கு போவதற்கு முன்னமே, பிரிட்டிஷ்காரர்கள் எப்படி வேலை செய்வது என்பதை முடிவு செய்து விட்டார்களாம். இந்தியப் பிரதிநிதிகளுக்கு இது அதிருப்திகரமா யிருக்கிறதாம். இருந்தால், என்ன செய்வது? அரசனை நம்பிப் புருஷனைக் கை விட்ட பேதை போல, ஊராரையும், உற்றாரையும் கை விட்டு அங்கு போய்ச் சேர்ந்தாகி விட்டது. இனி அவர்கள் இடிக்கும் இடியை யெல்லாம் பட்டுக்கொண்டு தானே யிருக்க வேண்டும்? அதற்கு இனி யாராவது வருவார்களோ?

ஜூலை மாத முடிவில் இந்தியப் பிரதிநிதிகளை ஊருக்கு விரட்டி விட்டு,அதன் பிறகுதான் கூட்டுக் கமிட்டி தனது சிபார்சுகளைத் தயாரிக்குமாம். இன்னும் இரண்டரை மாதங் கழித்து வெறுங் கையோடு ஊருக்கு ஓடி வருவதை விட, இப்பொழுதே இவர்கள் திரும்பி வந்தாலென்ன? இன்னும் எத்தனை அவமானங்களுக் கெல்லாம் ஆட்பட வேண்டுமோ, அதை யெல்லாம் பட்டே யாகவேண்டு மென்று அவர்கள் தலைவிலெழுதி யிருக்கும் பொழுது, அவர்கள் ஏன் வரப் போகிறார்கள்!

தந்தை காதில் ஏறுமோ?

தந்தை சாப்ரூ லண்டனுக்குச் சென்று "ததிங்கிணதோம்" போட்டுக் கொண்டிருக்கிறார். இந்த சமயத்தில் அவருடைய மகனான பிரகாச நாராயண சாப்ரூ கான்பூரில் நடந்திருக்கும் ஒற்றுமை மகா நாட்டில் ஒரு நேர்த்தியான பிரசங்கம் செய்திருக்கிறார். நாராயண சாப்ரூ கூறுவதாவது:—"வில்லிங்டன் அரசாங்கம் மரக் கட்டையா யிருக்கிறது. மகாத்மாவின் வேண்டுகோளை வெகு அவசரப்பட்டுத் தள்ளி விட்டது. காங்கிரஸைச் சிறையிலேயே வைத்திருப்பதன் காரணமென்ன? உண்மையான அதிகாரங்களை விட்டுப் பிரிய சர்க்காருக்கு இஷ்ட மில்லாததுதான் அந்தக் காரணம். நாம் காங்கிரஸோடு சேரவில்லை. என்றாலும், காங்கிரஸின் சுதந்திர தாகத்தை நாமும் பங்கிட்டுக் கொண்டவர்களே. சிறையிலிருக்கும் நமது வீரச் சகோதரர்கள் விடுதலை பெற நாம் ஓயா துழைக்க வேண்டும். தேசத்தின் ஜன நாயக இயக்கத்தை சர்க்கார் நசுக்கி விடாதபடி காக்க வேண்டும். சிறையிலுள்ள நமது வீரச் சகோதரர்கள் தங்களுடைய அரிய தியாகங்களால், நமது உள்ளங்களில் சுதந்திர ஆர்வத்தை எழுப்பி விட்டார்கள். அவ்வுணர்ச்சி அடங்கி விடாது பாதுகாக்க வேண்டுவது நமது பொறுப்பு. நாம் எப்போதும் தேசத்திற்கு ஊக்கமூட்டிக் கொண்டிருக்க வேண்டும்." மகன் சாப்ரூவின் இந்த வாசகம் லண்டனில் அல்லாடிக் கொண்டிருக்கும் தந்தை சாப்ரூவின் காதுகளில் ஏறுமோ?

மகாத்மா சட்ட மறுப்பை நிறுத்தி வைத்திருப்பதால் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று பெஷாவரில் ஒருவர் கேட்டதற்கு எல்லைப்புற மாகாண சர்க்கார் "முடியாது" என்று பதில் கூறி விட்டது.

வங்காளத்திலும், பீகாரிலும் சட்ட மறுப்பு நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. கார்யக் கமிட்டி யங்கத்தினர்களை விடுவிக்கும்படி பம்பாய் வர்த்தக மகா சபையார் பிரதம மந்திரிக்கு தந்தி யனுப்பி யிருக்கின்றனர்.

காந்தி பேரன் கைதி

காந்திஜியின் பேரனான காந்திலால் என்பவன் பர்தோலியில் "6 வாரத்துக்கு சட்டமறுப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது" என்ற துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக கைது செய்யப்பட்டான்.

சாவை வென்ற சக்தி !

முன்னொருக்கால் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக மகாத்மா 21 நாள் உபவாஸ மிருந்தாரல்லவா, அந்த உபவாஸ காலத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி 'நேஷனல் கால்' பத்திரிகையில் ஒருவர் ஞாபகமூட்டி யிருக்கின்றார்.

"மகாத்மாவின் பதினோராவது தினத்தன்று மிக்க அபாயகரமா யிருந்தது. இரத்த ஓட்டத்தின் வேகம் மிகவும் குறைந்து போய்விட்டது. நாடிகள் அடிப்பது தெரியவே யில்லை. இருதயம் நின்று போகு மென்றே எண்ண வேண்டியிருந்தது. மகாத்மாவிடம் நானும் மகாத்மா வருகிலிருந்த இதர டாக்டர்களும் வேண்டிக் கொண்டோம். அவரது உயிருக்கு ஆபத்து வந்து விட்டதாகவும், ஏதாவது ஆகாரம் செலுத்தா விட்டால் சாவு கட்டாயம் கிட்டிவிடுமென்றும் வைத்யனாகிய நான் எச்சரிக்கை செய்தேன். மகாத்மா சிரித்தார். மெதுவாக என் காதோடு "எனக்கு இன்னும் 6 மணி நேரம் கொடுங்கள். அதற்குள் என் நிலை சரியாகாவிட்டால் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்ளுங்கள்' என்று கூறினார்.

"தானாகவே ஆபத்துக்குள் நுழைகிறாரென நான் எண்ணிக் கொண்டேன். என்றால் அந்த நிலையில் 6 மணி நேரம் பட்டினி கிடப்பதென்பது முடியாத காரியம். அவருக்காக 6 மணி காத்திருந்ததோடு இதர வைத்யர்களோடும் அப்புறம் சோதனை செய்தால், அடடா என்ன ஆச்சரியம்! அவருடைய ஹிருதய ஓட்டம் வேகமாகி விட்டது. நாடிகளடிப்பது தெரிந்தது. அபாய எல்லையினின்று மகாத்மா வெளி யேறி விட்டாரென்றே சொல்ல வேண்டி யிருந்தது. இந்த நிகழ்ச்சியை வைத்திய சாஸ்திரத்தினால் விளக்கவே முடியாது. எனெனில் இது எங்கேனும் நடக்கக்கூடிய காரியமா?

"உபவாஸத்தின் 18-ம் தினத்தில் வேறொரு விதமான ஆபத்து நேரிட்டது. மகாத்மாவின் உடலில் ஏதோ ஓர் விஷ சத்து விருத்தியாகிக் கொண்டே வந்தது. அவரது மூத்திரம் தினம் ஆராய்ச்சி செய்யப்பட்டது. 18-ம் தினத்தில் மூத்திரத்தைச் சோதனை செய்தபோது இனி அவர் உயிர் நிற்காதென்றே சொல்ல வேண்டியிருந்தது. மூத்திரத்தில் அவ்வளவு விஷ நுண்ணுயிர்கள் அதிகமா யிருந்ததால் வைத்ய உதவி யின்றி மனிதன் பிழைக்கவே மாட்டான். அப்போதும் மகாத்மாவிடத்தில் நாங்கள் கெஞ்சினோம். 'காலை வரையில் பொறுத்துக் கொள்ளுங்களேன்' என்றார் மகாத்மா. நாங்களும் தலை வணங்கினோம். ஆனால் எங்களுக்குப் பயம்தான். மறு நாள் காலையில் மூத்திரத்தை சோதனை செய்தால் துளி விஷம் கூட அதில் காணப்படவில்லை! என்னே சக்தி! எனது வைத்ய அறிவினால் இந்த சக்தியை விளக்கக் கூடவில்லையே என் செய்வது!"

நண்பர்களுக்குக் கடிதங்கள்

உபவாஸ காலத்தில் பல நண்பர்களுக்கு காந்திஜி கடிதம் வரைந்திருக்கிறார். அவைகளில் சில பின்வருமாறு :

1. "உபவாஸம் என்பது ஹிந்து மதத்திலேயே ஒரு முக்கியமான தர்மம். ஹரிஜனங்கள் விஷயத்துக்காக என் போன்று ஆயிரக் கணக்கானவர்கள் ஆத்மத் தியாகம் செய்து கொண்டாலும் நான் ஆச்சரியப் படமாட்டேன்.

2. "இருப்பதும், இறப்பதும் ஆண்டவன் இஷ்டம். இச்சரீரத்தைக் கொண்டு அதிக வேலையை அவர் எதிர்பார்க்காவிடில் இக் கட்டை அழிந்து போகும்.

3. "ஜீவன்களைத் தன் தாடையில் வைத்து எப்படி பகவான் நசுக்குகிறார் என்பதை, கீதை 11-ம் அத்தியாயத்தின் கருத்தை, நீங்கள் உணர்ந்தீர்களா? நமக்கும் அதே கதி தான். பிழைத்தால் அதிக ஊழியம் செய்வேன். இறந்தால் ஆண்டவன் கிருபை.

4. "நான் இறந்தால் நீங்கள் துக்கப்படலாம். நான் இறக்கமாட்டேன். இச் சரீரம் அழிந்தால் தான் என்ன? ஒருவரும் என்னைப் பார்க்க ஓடி வராமல் அங்கங்கிருந்து தம் ஆத்மாவைப் பரிசுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

5, "எப்படி யிருந்தாலும் இவ்வுடல் ஒரு காலத்தில் அழியவே போகின்றது. ஏன் கவலைப் படுகிறீர்கள்? பிணிவாய்ப் பட்டிறப்பதைக் காட்டிலும் ஹரிஜனங்களுக்காக உயிரை விடுவது மேலன்றோ!

6. "எனது உபவாசத்திற்காக அனைவரும் சந்தோஷம் கொண்டாட வேண்டும். உபவாசம் ஆரம்பித்த பிறகுதான் மன நிம்மதி எனக்கு ஏற்பட்டுளது. அடுத்த நிமிஷம் என்ன நடக்கு மென்று நம்மால் அறிய முடியுமா?

"என் சரீரம் கண்ணாடி வளையல்களைவிடச் சுலபமாக உடையக் கூடியது. உள்ளே இருக்கும் ஆத்மாதான் முக்கியம்."

காந்தி தபஸ்

மகாத்மா தபஸ் ஆரம்பித்து இன்றோடு 11 நாட்கள் ஆகப் போகின்றன. டாக்டர்கள் தேக நிலையை வெகு கூர்மையாகக் கவனித்து வருகின்றனர். எப்பொழுதாவது குமட்டல் வருகின்றது. அதை நிறுத்துவதற்கு பிரான்சு தேசத்தில் பூமியை வெட்டி எடுக்கப்பட்ட "விச்சி" என்னும் ஜலத்தைக் குடிக்கவேண்டுமென்று டாக்டர்கள் வற்புறுத்தினார்கள். அதில் என்ன கலந்திருக்கிறது என்பதை பூரணமாய்த் தெரிந்த பிறகு மகாத்மா குடிக்க ஒப்புக் கொண்டார். எடை 91½ பவுண்டுக்கும் குறைந்திருக்கிறார். தேக நிலைமையைப் பற்றி மகாத்மாவைக் கேட்டதற்கு "வைத்தியர்கள் அநுமதித்தால் பந்தயத்துக்கு ஓடுவதற்கு நான் தயார்" என்று சொன்னாராம். கொசு வலை போட்டுக்கொள்ள மறுத்து, தேகமெல்லாம் மண் எண்ணெய் பூசிக் கொள்ளுகிறாராம்.

தினம் பகவத் கீதை முழுதும் படிக்கப்படுகிறது. சங்கீதக் கச்சேரி வேறு நடக்கின்றது. தேகத்தில் சூடு உண்டாக்குவதற்காக செயற்கை முறையில் ஏற்பாடு நடக்கின்றதாம்.

கஸ்தூரிபாய் வருவதற்குள் வாராந்திர மௌன தினத்தை மகாத்மா ஆரம்பித்து விடுவார் என்று முன்னமேயே அறிந்து, லேடி தாக்கர்ஸே முன்னதாகவே 25 மைல் தூரம் மோட்டாரில் சென்று காந்தியின் மனைவியை அழைத்து வந்தார். மனைவியைச் சந்தித்ததும் காந்திஜி சிரித்துவிட்டு அரை மணி நேரம் சம்பாஷித்தாராம். மகாத்மா உண்ணாவிரத மேற்ற தினம் முதல் அன்னை கஸ்தூரிபாய் பாலும், பழமுமே உட்கொண்டு வருகிறார். அபிப்பிராய பேதம் காரணமாகப் பல வருஷங்களாகச் சந்திக்காமலிருந்த மகாத்மாவின் மூத்த குமாரன் ஹரிலால் காந்தி தந்தையைப் பார்த்துவிட்டுப் போனார். பாபுவின் மூத்த சகோதரரின் மனைவியும் வந்திருக்கிறாள்.

டாக்டர் ஸ்பீகல் என்னும் ஜெர்மனிய சிஷ்யையை சபர்மதி ஆசிரமத்துக்குப் போகும்படி கூறினாராம். அம்மாது, தாம் முந்தி நடந்து கொண்டதற்காக வருந்தி ஹரிஜன வேலை செய்வதற்காக ஆமதாபாத்துக்குப் புறப்பட்டாராம்.

அமெரிக்க ஸ்திரீ ஒருத்தி ஒரு வைர மோதிரத்தைப் பரிசாகக் கொடுத்து அதனால் விற்று வரும் பணத்தை ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவரின் கடனைத் தீர்க்கும்படி கூறினாளாம். இதை மகாத்மாவிடம் அறிவித்தபோது மிகவும் சந்தோஷப் பட்டாராம்.

காசு கோட்டிக் கிடக்குதா?

"மத்திய மாகாணத்து கவர்னரா யிருந்த ஸர் மாண்டேகு பட்லரின் உத்தியோக காலம் காலாவதியாகி விட்டது. அவருக்கு உடனே பிரிட்டிஷ் சர்க்கார் புதிய உத்தியோகம் தந்திருக்கிறார்கள். 'மான்' தீவு என்ற இடத்தின் உதவி கவர்னராக அவரை யனுப்பப் போகிறார்கள். இப்போது ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். இந்தியாவில் ஐக்கிய மாகாண கவர்னருக்குக் கிடைக்கும் சம்பளம் வருஷத்துக்கு 72 ஆயிரம் ரூபா யாகும். ஆனால் மான்தீவு உப கவர்னருக்கு 2000 பவுன் தான் வருஷச் சம்பளமாகும். (சுமார் 27 ஆயிரம் ரூ.) அதாவது ஐக்கிய மாகாணத்தின் சம்பளத்தில் சுமார் மூன்றிலொரு பங்கு தான் கிடைக்கும். நிற்க,

இந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின்கீழ் வில்லிங்டன் பிரபு பல உத்தியோகங்களை வகித்திருக்கிறார். அவ்வக்காலங்களில் அவருக்குக் கிடைத்த சம்பளத் தொகைகளும் கவனிக்கத் தக்கவை.

பம்பாய் கவர்னரா யிருந்தபோது வருஷத்துக்கு, லக்ஷத்து 20 ஆயிரம் ரூபாய்.

கானடா தேசக் கவர்னரா யிருந்தபோது 10 ஆயிரம் பவுன் தான்.

பிறகு இந்திய வைஸ்ராயானதும் வருஷத்துக்கு 2,56,000 ரூபாய் வீதம் சம்பளம் வாங்கிக் கொண்டு இப்போது இருந்து வருகிறார்."

இந்த விஷயங்களை 'டிரிபியூன்' பத்திரிகை எடுத்துக் காட்டியிருக்கிறது. ஒரு பிரிட்டிஷாருக்கு இதர நாடுகளை விட இந்தியாவில்தான் கொள்ளை கொள்ளையாகச் சம்பளம் கொட்டிக் கொடுக்கப் படுகிறதென்பதற்கு இது சிறந்த உதாரணமல்லவா? இந்தியாவில் 72 ஆயிரம் வாங்குபவன் இன்னொரு இடத்தில் அதே உத்தியோகத்துக்கு மூன்றிலொரு பங்கு தான் வாங்குகிறான். ஏன் இந்த விபரீதம்? இந்திய ஏழையிடமிருந்து வசூலிக்கும் பணத்தை இப்படி வாரி யிறைக்க வேண்டுமோ? கானடாவை விட, 'மான்' தீவை விட, மிக மிக ஏழ்மையானது இந்தியா; ஆனால் இந்தியாவில் தான் பிரிட்டிஷ் உத்யோகஸ்தனுக்கு வேட்டை. இங்கு பணம் என்ன கொட்டிக் கிடக்கிறதா? அல்லது கேள்விமுறை கிடையாதென்ற தைரியமா?

திரிசங்கு நிலைமை

ஒரு பெரிய ரயில்வே ஸ்டேஷனில் ஏராளமான ஜனங்கள் கூட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் அங்கே ஒரு புலி வந்து விட்டது. ஸ்டேஷன் மாஸ்டர் ஒரு பிரகஸ்பதி: உடனே மேலதிகாரிகளுக்கு ஒரு தந்தி யடிக்கலானார். "ஸ்டேஷனில் புலி வந்திருக்கிறது. அதற்கென்ன செய்யலாம்? உடனே தந்திமூலம் உத்திரவு அனுப்புங்கள்" என்பது ஸ்டேஷன் மாஸ்டர் மேலதிகாரிகளுக்குக் கொடுத்த தந்தி. கல்கத்தாக் காங்கிரஸில் கைது செய்யப்பட்டவர்கள் சம்பந்தமாக இப்பொழுது வெளி வந்திருக்கும் ஒரு தகவல் இந்தக் கதையையே நமக்கு ஞாபக மூட்டுகிறது.

கைது செய்யப் பட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை. ஆகையால், 'ஏ', 'பி', 'ஸி', என்ற எந்த வகுப்பும் அவர்களுக்குக் கிடையாது. விசாரணையிலிருந்த கைதிகளென்று சொல்லலாமோவென்றால், அதுவும் முடியாது. ஏனெனில், அவர்கள்மீது வழக்கு எதுவும் தொடரப்படவில்லை. கீழதிகாரிகளுக்கு என்ன செய்வதென்று புரிய வில்லையாம். புலியைக் கண்ட ஸ்டேஷன் மாஸ்டர் மாதிரி, மேலதிகாரிகளுக்கு "இவர்களை எப்படி நடத்துவது? தந்தி மூலம் உத்திரவு செய்யுங்கள்" என்று அந்தக் கீழதிகாரிகள் விண்ணப்பித்துக் கொண்டார்களாம்.

கும்பகோணம் சித்திரைத்தேர் அசைந்தாலும் அசையும்; அரசாங்க இயந்திரம் இந்த மாதிரி விஷயங்களில் சுலபத்தில் அசையுமா? இக்கைதிகளை எந்த வகுப்பில் சேர்ப்பது என்ற விஷயத்தை முடிவு செய்து, உத்திரவு தயாரிக்கு முன்னதாக, "அவர்களை விடுதலை செய்து விடு" என்ற வேறோர் உத்திரவு வந்து விட்டதாம். இப்பொழுது அக்கைதிகள் தாங்கள் சிறையிலிருந்த ஒரு வாரத்தில் பட்ட அவதியை வெளியிட்டிருக்கிறார்கள். தாங்கள் அங்குமில்லாமல் இங்குமில்லாமல் திரிசங்குவைப் போல் இருந்ததாக அவர்கள் கூறுகிறார்கள். இது வாஸ்தவமா வென்று பார்லிமெண்டில் ஒரு அங்கத்தினர் கேள்வி கேட்டால் ஹோர் பதில் சொல்வதில் மழுப்புகிறாராம். என்னே அரசாங்கத்தின் போக்கு!

அட்கு போன மூளை

வங்காளத்தில் பதினாயிரக் கணக்காக துண்டுப் பிரசுரங்கள் பறக்கின்றனவாம். ஆங்கிலத்தில் சில நோட்டீஸ்கள்! வங்காளி பாஷையில் சில பிரசுரங்கள். "வங்காள விளம்பர சபையார்" என்று அத்துண்டுப்ரசுரங்களில் காணப்படுகின்றனவாம். இந்த விளம்பர சபைக்கு விசை எங்கிருக்கிறதென்பது பெரிய புதிராகவே யிருந்து வருகிறது. நிற்க,

கட்டுக் கட்டாக வீசப்பட்டு வரும் அந்தத் துண்டு ப்ரசுரங்களில் கண்டிருக்கும் விஷயம் தான் கவனிக்கத்தக்கது. அதை எழுதிய பேர்வழி முன்னாலேயே தன் மூளையை எங்கேயோ அடகு வைத்து விட்டு பிறகு பேனாவை எடுத்துக் கொண்டு எழுத ஆரம்பித்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனெனில் அந்தப் பிரசுரங்களிலுள்ள அபத்தத்திற்கு எல்லையே யில்லை. ஒரு உதாரணம் கேளுங்கள்.

"நாட்டில் சட்ட மறுப்பு ஆரம்பித்தது. அதன் பயனாக வங்காளத்தில் பல விடங்களில் கொள்ளைகள் அதிகரித்து விட்டன......காந்திஜி தாண்டிக்கு உப்பெடுக்கச் சென்றார். அதன் பின்னால் சிட்டகாங்கில் ஆயுதக் கொள்ளை நடந்தது. ஜீலத்திலும் ஜெஸ்ஸூரிலும் கலகங்கள் தோன்றின" என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் விஷயங்களைக் கலந்து மேற்படி பிரசுரங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது.

மகாத்மா தொடங்கிய இயக்கம் அகிம்சா தர்ம இயக்கம். அப்படிக்கிருக்க உப்பெடுக்கச் சென்ற காந்திஜிக்கும் சிட்டகாங் ஆயுதச் சாலைக்கும் சம்பந்தம் கற்பிக்கும் மூளை ஒன்று கோளாறடைந்திருக்க வேண்டும். அல்லது மூளை அடகு போயிருக்க வேண்டும்.

"தென்னை மரத்தில் தேள் கொட்டியதால் பனைமரத்தில் நெறி யேறிற்று" என்றானாம் பாதி மடையன். உடனே முழு முட்டாள் எழுந்து

வக்கணையாய் அம்பு விட்டேன்
வாழை மரத்தைத் தச்சுது!
பொக்கென என் காலில் ரத்தம்!
போச்சுதடா கண் குருடாய்

என்று பாடினானாம். இந்த இரண்டு பேர்வழிகளையும் தோற்கடித்து விட்டான் 'வங்காள விளம்பர சபை'யின் ஆசிரியன்!

மூக்குப் பொடி 17 லக்ஷ ரூபா

மூக்குப் பொடி போடுகிறவர்களுக்கு 'சகோதரத்துவம்' அதிகம். அவர்களிடை கொடுக்கல் வாங்கல் தாராளமாக உண்டு. இப்படி இனாம் விநியோகம் ஓர்புற மிருக்க, காசு கொடுத்து வாங்குகிறவர்களைப் பற்றிய கணக்கை நாம் கவனிப்போம். நமது தேசத்தில் பொடி போடுவதில் முன்னணியிலிருப்பது சென்னை மாகாணம் தான். இங்குள்ள ஆண் மக்களில் சுமார் 100க்கு 10 பெயருக்கும், பெண்களில் 100க்கு 2 பெயருக்கும், சிறுவர்களில் 100க்கு 2 பெயருக்கும் இந்தப் பொடி உறிஞ்சும் வழக்கம் இருப்பதாகக் கூறலாம். அகில இந்தியாவுக்கும் கணக்குப் போட்டால் இருநூறு பேருக்கு ஒருவர் வீதம் 'பொடி பக்தர்' இருக்கலாம். பொடி போடும் பெண்களைக் கணக்கில் தவறு செய்து மறந்துவிட்டு ஆண்களை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

மொத்த ஜனத் தொகை	35,28,37,778
அதில் பெண் மக்கள்	17,10,08,855
ஆகவே ஆண் மக்கள்	18,18,28,923
இருநூற்றுக்கு ஒருவரென்றால்	909145

ஒரு நாளைக்கு ஒரு மனிதன் ஒரு தம்பிடி பொடியே போடுவதாக வைத்துக் கொள்வோமானால் 909145 தம்பிடி ஒரு நாளைக்கு செலவழிகிறது. அப்படியானால் 365 நாளைக்கு அதாவது ஒரு வருஷத்துக்கு,

ரூ. 17,28,322—8—5 ஆகிறது.

பொடி வழக்கத்தினால் எவ்வளவு காசு செலவழிக்கப் படுகிறதென்பதை இதனின்று தெரிந்து சொல்லலாம். அப்புறம் புகை பிடிப்பது வேறே இருக்கிறது; புகையிலை மெல்லுவதும் இருக்கிறது; இது எல்லாவற்றையும் சேர்த்தால் கணக்கு மேலே ஓடிப் போய் விடுமல்லவா? மனிதன் உயிர் வாழ்வதற்குக் கட்டாயம் பொடி என்ற வஸ்து அத்தியாவசியமானதா— அதுவுமில்லை. ஆகவே சுகாதார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பார்த்தால் இந்த விஷயத்தில் சீர்திருத்தக்காரர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு உழைக்கவேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா?

—"ஹெல்த்"

ஹரிஜன ஊழியம்

மதுரையில் ஒருவர் சேரியைத் தாமே சுத்தம் செய்து காட்டினாராம். சேரியில் உள்ள சிறுவர்களுக்கு மற்ற பள்ளிக்கூடங்களில் சமத்துவமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தலைவர்கள் ஒப்புக் கொண்டு ஏற்பாடு செய்தார்களாம்.

மன்னார்குடி பெரிய சேரியில் இரண்டாவது 'ஹரிஜன தினத்'தன்று ஒரு இராப்பள்ளிக்கூடமும். தெப்பக் குடியில் ஒரு பகல் ஒரு இராப் பள்ளிக்கூடமும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் சம்பளமன்னியில் கல்வி கற்பிப்பதென்று தஞ்சை ஜில்லா போர்டார் தீர்மானித்திருக்கின்றனர்.

ஐரோப்பாவில் புகைச்சல்

வான்பேப்பன் என்பவன் ஜெர்மனியின் பெரிய அதிகாரிகளில் ஒருவன். அவன், "ஜெர்மனிக்கு இன்னும் யுத்த சக்தி இருந்து வருகிறது. ஸ்திரீகட்கு, மக்கட்பேறு அவசியம். அதே போல் மனித வர்க்கம் அழியாது வளர வேண்டுமானால், அவ்வப்போது யுத்தங்களும் அவசியம்" என்று கூறினான். அவன் அவ்வாறு கூறியதால் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய மூன்றும் ஒரு பொதுவான கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரியும், பிரஞ்சு ராஜதந்திரி ஒருவரும் கூடிப் பேசி யிருக்கிறார்கள். இந்த மூன்று நாடுகளும் தங்களுடைய கொள்கைகளைப் பற்றித் தனித் தனியாக அறிக்கைகள் வெளியிடப் போகின்றனவாம்.

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள இந்தப் புகைச்சலின் முடிவு என்ன வாருமோ?

'சங்கு சகாய நிதி'

முன் வரவு	ரூ.	112	0	0
R. கிருஷ்ணய்யர், பம்பாய்		10	0	0
சி. பாலசுந்திர முதலியார், ஆம்பூர்		1	8	0
விக்கிரம கம்பெனியார், ஆம்பூர்		0	8	0
சமயபுரம் அனுதாபிகள்		6	0	0

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.